தமிழ் நிலம்

உலகத் தமிழின முன்னேற்றக் கழக வெளியீடு

சிறப்பாசிரியர்

பாவலரேறு பெருஞ்சித்திரனார்

தி. பி. 2019 கும்பம் (12-3-1988) மார்ச்சு-88 85 காசுகள் (இதழ் எண்: 101)

தொலைக்காட்சி 'இராமாயணம்' ஆரிய -திராவிட'ப் போரை, மீண்டும் தட்டி எழும்பும் படி அமைந்திருக்கிறது!

இராமாயண ஒளிபரப்பு நோக்கம் தமிழின வெறுப்பை வளர்ப்பதே!

இராவணன் வழியாகத் தமிழினத்தை அவமானப் படுத்துகின்றனர்!

'இராமாயண' ஒளிபரப்புக்குப் பாவலரேறு கண்டனம்!

கடந்த ஆறு மாதங்களுக்கு மேல் தில்லித் தொலைக் காட்சியின் ஒளிபரப்பில், இராமயணம் ஒளிபரப்பாகி வருவதை அனைவரும் அறிவர்!

இலங்கையில் விடுதலைப் போர் தொடங்கியுள்ள இந்த நேரத்தில், திட்ட மிட்டுத் தில்லி ஆட்சியால் இராமாயண ஒளிபரப்பு நடந்து வருவது, தமிழினத்தின் வலிவைப் பழங்கதைகளைக் காட்டி ஒடுக்குவதற்கே உதவும் என்பதை, அதன் கதைப் போக்கையும் உரையாடல்களையும் நிகழ்ச்சிகளையும் கூர்ந்து கவனித்துப் பார்த்தால் அனைவரும் உணர முடியும்.

உரையாடல்களுக்கு நடு நடுவே ஆரிய — திராவிட இனவுணர்வுகள் தூண்டப் படுவதை அனைவரும் அறியலாம். தமிழினத்தை இழிவு படுத்தும், கோழைமை வாய்ந்ததாகக் காட்டும் காட்சிகளும் உரையாடல்களும் தமிழர் மனத்தை மிகவும் புண்படுத்துவதாக உள்ளன. பொதுவாகத் தொடக்கத்திலிருந்தே இடையிடையே உள்ள உரையாடல்கள் தமிழின மக்களை — திராவிட இன மக்களைக் கீழ்மைப் படுத்துவதாகவே அமைந்து உள்ளன.

(தொடர்ச்சி 3-ஆம் பக்கம்)

Scanned with CamScanner

கொள்ளை, கொள்ளை! அரசியல் கொள்ளை!

தமிழகத்தில் ம. கோ. இரா. (எம். சி. ஆர்.) ஆட்சியில் அரசியலே இழிந்து போய்விட்டது என்பது மட்டுமில்லை. கொள்ளையடிப்புக் கூடாரமாகப் போய் விட்டது என்பதை எவருமே மறுக்க முடியாது. அவர் இயற்கையாகச் செத்திருக்க வில்லையானால் (அப்படிச் சொல்லப் படுகிறது) இப்பொழுதுள்ள நிலைக்குத் தூக்குப் போட்டுக் கொண்டுதான் செத்திருக்க வேண்டும்.

அவர் காலத்தில் நடந்த கொலை, கொள்ளை நிகழ்ச்சிகளெல்லாம் ஒவ்வொன்றாக இப்பொழுது வெட்ட வெளிச்சமாகி வந்து கொண்டிருக்கிறது. இந் நீண்ட தொடர்கதையின் முடிவு எங்குப்போய் என்றைக்கு முடிவடையுமோ, இப்பொழுது சொல்ல முடியாது!

எப்படியோ அவரின் மறைவிற்குப் பின் இக்கால் வளர்ந்து வரும் அரசியல் நாற்றத் தனங்களெல்லாம், ஓரளவு பொதுமக்கள் விழிப்படைவதற்குத் துணையாக இருக்கலாம் என்று கருதுகிறோம்.

அவர் காலத்தில் அடித்த கொள்ளைகள் பற்றி அண்மையில் செய்தித் தாள்களில் வந்த சில பட்டியல்கள் பொது மக்களின் சிந்தனைக்குக் கீழே தரப் படுகின்றன. கொள்ளைக் கூட்டத்தினர்க்குள் கருத்து வேறுபாடுகள் ஏற்பட்டுக் குழுப் பிரிவுகள் நிகழ்ந்த பின்னர் பழிவாங்கும் படலம் நிகழுவது உலகியல் நடைமுறை தானே! அவ்வகையில் வெளிவந்த உண்மைகள் இவை! இதில் சொல்லப் படும் கணக்குகள் கூடுதலாக இருக்கலாமே தவிர குறைவாக இருக்கவே இருக்காது என்று மட்டும் நாம் நம்பலாம்.

நடிகை செயலலிதா, சானகி கொள்ளைக் குழுவினரும் பிறரும் வெளிப்படுத்தியவை, இவை:

கொள்ளையடிப்பு: 1. எம். சி ஆரின் மருத்துவச் செலவுக்காகப் பேருந்து முதலாளிகளிடமிருந்து பறித்த 2. கோடி உருபாவை முன்னாள் பெருச்சாளி அமைச்சர் முத்துசாமி சுருட்டி விட்டார்.

கொள்ளையடிப்பு: 2. தென் இந்திய விசுகோசு நிறுவனத்திடமிருந்து 9 இலக்கம் உருபாவை வாங்கி ஏப்பம் விட்டார் இராகவானந்தம்.

கொள்ளையடிப்பு: 3. 1986-ஆம் ஆண்டு வருமான வரி அதிகாரிகள் பெருவணிகச் சாராயப் புள்ளி ஒருவர் வீட்டை ஆய்வு செய்து, கணக்கில் காட்டாமலிருந்த பலகோடி உருபாவை (எத்தனைக் கோடி என்று வெளிவரவில்லை) கைப்பற்ற, அத்தொகை முன்னாள் நடிகை சானகிக்குச் சொந்தமானது என்று தெரிந்தும் அதைப் பற்றி நடவடிக்கை இல்லை. இத்தொகை முன்னாள் அமைச்சப் பெருச்சாளிகளான பொன்னையன், ப. உ. ச., முத்துசாமி, வீராசாமி, நல்லுசாமி ஆகிய (ஆசாமிகள்) பெரும்பெருச்சாளி ம. கோ. இரா. வுக்குத் தெரியாமல் பொதுமக்களிடமிருந்து பறித்தெடுத்த பணம் ஆகும்.

கொள்ளையடிப்பு: 4. பலமாடிக் கட்டடங்களுக்கு உரிமம் வழங்கிய தில்லுமல்லுகளில் 10 கோடி உருபாவைக் கையூட்டாக வாங்கிய பெருமை முன்னாள் பெருச்சாளி அமைச்சர். திருநாவுக்கரசையே சாரும்.

கொள்ளையடிப்பு: 5. பணிகளிலிருந்தவர்களின் வேலை மாற்றல் உத்தரவுகளுக்காக 3 கோடி உருபாயை முன்னாள் அமைச்சப் பெருச்சாளி சாத்தூர் இராமச்சந்திரன் வாய்க்கரிசியாக வாங்கினார்.

கொள்ளையடிப்பு: 6. (இஃது ஒரு தொடர் கொள்ளை என்க.) இராமாவரம் தோட்டத்துக்கு, சாராய விற்பனைப் பங்கு வருமானம் ஒரு நாளைக்கு உருபா 48 இலக்கம் நாள் தவறாமல் வந்து கொண்டிருந்திருக்கிறது. மாதம் 15 கோடி! ஆண்டுக்கு 175 கோடி. ம. கோ. இராவின் 10 ஆண்டுக் கால ஆட்சி முழுவதும் வந்த 'சாராய வயல்' அறுவடையைக் கணக்குப் போட்டுக் கொள்ளுங்கள்!

கொள்ளையடிப்பு: 7. இலங்கை மக்கள் துயர் துடைப்புத் தொகை என்று பல முதலாளிகளின் இரும்புப் பெட்டியிலெல்லாம் கை வைத்தார் ம. கோ. இரா. இதில் கணக்கில் வந்தவை கொஞ்சம்; வராதவை பெரும் பகுதி. கணக்கில் வராதவை ஏறத்தாழ 1000 கோடி உருபா இருக்கும் என்று கணக்குக் கூறப் பெறுகிறது. இதில் 700 கோடியைச் சிங்கப்பூர் வைப்பகங்களில் போட்டு, அப்போராளிகள் எடுத்துக் கொள்ளச் செய்ததாகச் சொல்லப் படுகிறது. மீதி 300 கோடி என்ன ஆனதோ, அந்த இராமச்சந்திரனுக்கே வெளிச்சம் என்று கூறப்படுகிறது.

கொள்ளையடிப்பு: 8. (கருணாநிதி வெளிப்படுத்தியது.) ம. கோ. இரா. மறைந்த அன்று இழவு வீட்டில், ஒரு பேரம்! வீட்டு வசதி வாரியத்தில் ஒரு சலுகையைச் செய்த முன்னாள் அமைச்சர் கைக்கு வல்லிசாக ஏழு இலக்கம் போய்ச் சேர்ந்திருக்கிறது. அதை வாங்கி இரும்புப் பெட்டியில் பூட்டிவைத்து விட்டு, அந்த அமைச்சர் ம. கோ. இரா. பிணத்தின் மீது 'ஐய்யோ முறையோ' என்று அழுது புரண்டிருக்கிறார்.

இன்னும் என்னென்ன கைம்மாற்றுகள் நடந்துள்ளன என்பவையெல்லாம் படிப்படியாக வெளி வரலாம்; அல்லது வராமல் போகலாம். ஆனால் மொத்தத்தில் ம. கோ. இரா. கொள்ளையடிப்பு ஆட்சிக் காலத்தைத் திரைப்படப் பிடிப்பாளரும்

(தொடர்ச்சி 11-ஆம் பக்கம்)

(முதல் பக்கத் தொடர்ச்சி)

குறிப்பாகச், சென்ற கிழமை, 6-3-88-இல் ஒளி பரப்பான காட்சியில், இந்திரசித்து, இராவணன் அவையில் நடந்து கொண்ட காட்சிகளும், பேசிய உரையாடல்களும் இராவணனையும், அவன் அவையினரையும் மட்டும் இழிவு படுத்தவில்லை; தமிழினத்தையே அவமதிப்பதாகவும் இழிவு படுத்துவதாகவும் அமைந்திருப்பதைக் காண, கேட்க மனம் மிகவும் புண்பட்டுப் போனது.

கதைப் படியே எடுத்துக் கொண்டாலும், இராவணன் மிகப் பெரும் வீரன். கோழை உணர்வு கொண்டவனல்லன். நேர்மையாளன். ஒழுக்கத்தில் சிறந்தவன். அவன் தெய்வத்திற்கிணையாக வைத்துப், போற்றப் பெற்றவன். 'இலங்கேசுவரன்' 'இராவனேசுவரன்' என்றே அவன் புகழப்பெறும் படி வாழ்ந்திருக்கின்றான். யாரினும் அவன் இறைப் பற்றுளன்; தென்னாட்டுக்கே உரிய அறிவு மதமாகிய 'சிவனிய' மதத்தைச் சார்ந்தவன். நேரடியாகப் போரிலோ அறிவிலோ அவனை அவன் காலத்தில் வெல்லுவதென்பது யாராலும் முடியாததாகவே இருந்தது. மிகப்பெரும் இசைத்துறை வல்லுநன். இறையருள் பெற்றவன். சிவனை நோக்கி எவருமே செய்ய இயலாத பெரும் தவமியற்றி அரிய ஆற்றல் களைப் பெற்றிருந்தான் என்று வால்மீகியே குறிப்பிடும் அளவுக்கு அவன் பெருமை அளவற்றது. அத்தகைய ஆற்றல் வாய்ந்த மாபெரும் திராவிட மாவீரனை, இராமன் என்னும் ஒரு கோழை பல சூழ்ச்சிகளால் வென்றான் என்பதே. கதை!

இவ்வாறான அறிவும் திறமும் வீரமும், அரிய ஆற்றல்களும், கலை, பண்பாடுகளும், ஒழுக்கமும் சான்ற அவனை, ஒரு மிகப்பெரும் கோழையாகவும் ஒழுக்கக் கேடனாகவும் தொலைக்காட்சி இராமாயணத்தில் காட்டப் பெறுவது கொடுமையிலும் கொடுமை! எந்த மானமுள்ள தமிழனும் பொறுத்துக் கொள்ள இயலாதது.

மேலும் இராமாயணக் கதை என்பது எங்கோ, எப்பொழுதோ, நடந்த ஆரிய திராவிட இனப் போரையே அடிப்படையாகக் கொண்ட தென்பதும், அதில் வரும் வாலி, சுக்கிரீவன், அநுமன் முதலிய வானரக் கூட்டம் என்பது திராவிட அஃதாவது தமிழினத்தவர்களே என்பதும், வீடணன் முதலியவர்கள் தமிழினத்தவரை ஆரியர்க்குக் காட்டிக் கொடுத்த வஞ்சர்களே என்பதும், சவகர்லால் நேரு உள்ளிட்ட வரலாற்றுப் பேராசிரியர்கள் அனைவரும் ஒருமுகமாகக் கருத்தறிவித்த பின்னும், தொலைக்காட்சியில், இப்படிப்பட்ட இராமாயனக் கதையைத் தம் அதிகார, ஆணவ, பண வலிவோக்கத்தின் மமதையால் தில்லி வடவராச்சியும், இராசீவும் திட்டமிட்டு நாடெங்கும் பரப்பி வருவது, மீண்டும், தமிழின ஒடுக்கத்திற்கே அல்லது அழிப்புக்கே வழியமைத்துக் கொடுக்கும் கரவான அமைதிப் போர்த் தந்திரமே ஆகும்.

எனவே, இதை மீண்டும் ஒளிபரப்பக் கூடாதென்று, தமிழினநலம் நாடும் தலைவர்களும் மானமுள்ள பாராளுமன்ற உறுப்பினர்களும் அறிக்கைகளும் கோரிக்கைகளும் விடுப்பதுடன், போராட்டங்களும் நடத்துதல் வேண்டும்.

தெரிந்தோ தெரியாமலோ, அல்லது உணர்ந்தோ உணராமலோ, தமிழினம் மிகக் கொடுமையான அரசியல் இனவியல் அழிவுச் சூழ் நிலையில் அகப்பட்டுக் கொண்டிருக்கும் இந்நேரத்தில், அது தங்களுக்குள்ள இன, மத, சாதியக் கட்சி வேறுபாடுகளிலிருந்து தன்னை மீட்டுக் கொண்டு புறத்தே வரும் பருமனான இப் பகை நிலையிலிருந்து விடுவித்துக் கொள்ள முயற்சி செய்ய வில்லையானால், இனி எதிர் காலத்தில் அது தன் ஒட்டு மொத்த வீழ்ச்சியினின்றும், அழிவிலிருந்தும் தன்னைக் காத்துக் கொள்ள முடியவே முடியாது என்பதை அனைத்துத் தமிழர்களும் உணர்ந்து கொள்ள வேண்டும்.

இந்தித்திணிப்பு என்பது மொழியாலும், தமிழகத்தில் இப்பொழுதுள்ள குடியரசுத் தலைவர் ஆட்சியென்பது அரசியலாலும், இராமாயண ஒளிபரப்புப் போன்றவை இனத்தாலும், தமிழினத்தின் மேல் ஒட்டு மொத்தமாகச் சூழ்ந்திருக்கும் போர் மூட்டங்களாகும். அத்துடன் இலங்கைச் சூழலால் தமிழின அழிப்பு வேலை ஏற்கனவே தொடங்கப்பட்டு நடந்து வருவதையும் நாம் அறிவோம். இந்த நிலையில் அரசியல் பதவிகளுக்காக இங்குள்ள தமிழர்கள் அடித்துக் கொண்டும் பிடித்துக் கொண்டும் கிடப்பது அறிவுடைமையாகாது.

தமிழினத் தாக்கங்களைத் தமிழகப் பொது மக்கள் உணரவில்லை. அவர்கள் உணராமல் இருப்பதற்கு நம் அரசியல் தலைவர்களே காரணம். அவர்களை ஏமாற்றி வாழ்வதே அவர்களது குறிக்கோளாகும். இந் நிலையில், தமிழின நல நாட்ட முடையவர்களே பெரும் அளவில் இம் முயற்சிகளில் பங்கு கொள்ள வேண்டும். அதனடிப்படையில் ஒரு பெரும் பேரினக் கிளர்ச்சி தொடங்கப் பெறுதல் வேண்டும் அந் நிலையில் என்ன நடக்கும்? தமிழகத்தில் தொலைக் காட்சிப் பெட்டிகளல்ல, தொலைக் காட்சி நிலையங்களே உடைபடும்! இந்தி எதிர்ப்பன்று, இந்திய எதிர்ப்பே இங்கு நடக்கும்! இராசீவ் இல்லை; இராசீவ் இனமே இங்கிருந்து விரட்டி யடிக்கப் பெறும். அது எப்போது? காலம் விடை சொல்லும்! 0

இன்றைய அரசியல் போலிமைகள்!

கூலி ஊர்வலங்கள்! போராட்டங்கள்! பொதுமக்கள் விழிப்படைய வேண்டும்!

இன்றைய அரசியல் நடவடிக்கைகள் அனைத்தும் பொதுமக்களை ஏமாற்றும் பண நடவடிக்கைகளே!

பணம் உள்ளவர்களே அரசியலில் மேலாளுமை பெற முடியும் என்பது பொதுவான உண்மையாக இருந்தது! ஆனால், இன்றோ அதுவே சிறப்பாக வளர்ந்து, அனைத்தும் விலைக்கு வாங்கும் ஆரவார வேடிக்கைகளாகப் போய் விட்டன.

ஊர்வலங்கள், பேரணிகள், பொதுக் கூட்டங்கள் ஆகிய அனைத்தும் கூலிப் பட்டாளங்களை வைத்து, நடத்தும் போலித்தனங்களாக ஆகிவிட்டன. ஆளுங்கட்சியானாலும் சரி, எதிர்க்கட்சிகளானாலும் சரி, அனைத்துமே மூட்டை மூட்டையாகப் பணத்தை வைத்துக் கொண்டு செய்யும் நடவடிக்கைகளாகவே ஆகிவிட்டன.

கொள்கை, கூப்பாடு, கோரிக்கை என்பவற்றைச் சொல்லிக் கூட்டம் சேர்ப்பது என்பதெல்லாம் இப்பொழுது மலையேறி விட்டது. இன்று, எதற்கெடுத்தாலும் பணம்! பணம்!! பணம்!!! பணமில்லாதவன் ஒரு சிறு கூட்டத்தையும் கூட்ட முடியாது என்னும் அளவுக்கு நிலைமை இழிவாகப் போய்விட்டது.

இதற்கேற்ப சில புதிய தரகு வணிக முறைகளே உருவாகி விட்டன. சென்னை, பம்பாய், கல்கத்தா, தில்லி போன்ற பெரு நகரங்களில் இதற்கெனக் கொழுத்த ஒப்பந்தக் காரர்களே அமைந்து விட்டனர்.

என்ன கூட்டம் கூட்ட வேண்டும், எவ்வளவு பேரை அழைத்து வரவேண்டும், சீருடையா, கொடியா, கொள்கை முழக்கமா, ஊர்வலமா, பேரணியா, வேலை நிறுத்தமா, கதவடைப்பா, உண்ணா நோன்பா — எதைச் செய்தாலும், எந்தக்கட்சிச் சார்பில் செய்தாலும், அவற்றுக் கெல்லாம் பேரம் பேசப்படுகிறது. அது அதற்கென்று தனித்தனிக் கூலிகள், கட்டணங்கள், கொடுத்தால் போதும். அவர்கள் விரும்பும் அனைத்தும், எளிதாக நிறைவேறி விடுகின்றன.

'*கூலிக்கு மாரடிப்பது*' என்பது வழக்கில் கூறப்படும் வெறும் சொற்றொடர் இல்லை. நடைமுறையிலேயே இவ்வழக்கம் இருந்திருக்கிறது.

நமக்குத் தெரிந்த அளவில், தலைவர்களின் பிறந்த நாள் விழாக்கள், பெரிய வீட்டுத் திருமணங்கள் போன்றவற்றில் கூட, இக் கூலிக்கு மாரடிக்கும் நடைமுறைகள் பின்பற்றப் படுகின்றன. தங்கள் பணத்தையும், தாங்கள் வாங்கிக் கொடுத்த பரிசுப் பொருள்களையும், இன்னும் சில இடங்களில் தங்களால் வாங்கிக் கொடுக்கப்பட்ட மாலைகளையும் வேறு வேறு ஆள்களிடம் கொடுத்து, எல்லார் முன்னிலையிலும், தங்களுக்கு அன்பளிப்பாகவும், பரிசாகவும், பாராட்டாகவும். கொடுக்கச் செய்யும் பகட்டு வழக்கம் ஏற்கனவே சில பகுதிகளில் இருந்தது. இக்கால் இது அரசியலிலும் புகுந்து விட்டது. கூலிக்கு அமர்த்தப்பட்ட இவர்களைப் பார்த்து வேறு சிலரும் அப்படிச் செய்வார்கள் இல்லையா? இதை மற்றவர்கள் பார்த்தும் பெருமையாகக் கருதுவார்கள் இல்லையா? இதில் வருமானத்துக்கு வருமானம், பெருமைக்குப் பெருமை இரண்டுமே, கிடைக்கின்றன. அன்றோ?

நமக்குத் தெரிந்த தமிழகக் கட்சித் தலைவர் சிலர் ஏற்கனவே இந்த நடைமுறையைப் பின்பற்றி வந்திருக்கிறார்கள். இப்பொழுது இந்தக் கரவான நடைமுறை அரசியல் கட்சிகள் செய்யும் ஒவ்வொரு செயலுக்கும் வலுவாக அடிப்படையாக விரிவடைந்து விட்டது.

கூட்டம் சேர்க்க வேண்டுமா? ஒருவேளை சாப்பாடு போட்டு ஆளுக்குப் பத்தோ இருபதோ கொடுத்தால் போதும்! வண்டி வண்டியாக (சரக்குந்துகள்தாம்) எத்தனைப் பேர்களும் கிடைப்பார்கள்! இதே போல் ஊர்வலமா, கொள்கை முழக்கமா, போராட்டமா, பேரணியா, சாலை மறியலா உண்ணா நோன்பா, 'கேரோ'வா என்று எல்லா நடவடிக்கைகளுக்கும் கூலிக்கு ஆட்கள் கிடைக்கிறார்கள். வேலையில்லாத் திண்டாட்டத்தில் இப்படி ஒரு வேலை கிடைப்பது மக்களுக்கும் பயனுடையதாகவே படுகிறது. இந்நிலை சிறைக்குப் போகின்ற அளவில் கூட வளர்ந்து விட்டது. தமிழகத்தில் உள்ள இரண்டு மூன்று கட்சிகள் இதே முறையில் கடந்த நான்கைந்து ஆண்டுகளாகவே, கூலி ஆட்களைத் தங்கள் கட்சி முத்திரையுடன், போராட்டம் என்று மாய மயக்கு அடிப்படையில் சிறைக்கு அனுப்பி வருவது நமக்குத் தெரியும்.

ஒரு முறை நாம் கோவைச் சிறையில் இருந்த பொழுது, இப்போலிப் போராட்ட வீரர்களை நாம் கண் கூடாகவே நேரில் கண்டு, இவ்வுண்மைகளை அறிய முடிந்தது. அக் கூலிப் போராட்ட வீரர்கள் அப்பொழுது சிறையில் கழித்த ஒவ்வொரு நாளைக்கும், அவர்கள் குடும்பம் ஒவ்வொன்றிற்கும் உருபா இருபத்தைந்து மேனி அப்பொழுதே கொடுக்கப் பட்டது. இன்றைய நிலையில் கூலி இன்னும் கொஞ்சம் கூடியிருக்கலாம். ஆனால் முறை ஒன்றுதான்! எப்படியோ, அரசியல் என்பது இப்பொழுதெல்லாம் நாறுகின்ற சாய்க்கடையாக, மலக் குழியாகப் போய் விட்டது. இப்பொழுதுள்ள அரசியல் வெறும் பகட்டான விலைமகள் அரசியலே. இதில் இராசீவுக்கும் விலக்கில்லை. இந்த நிலையில் பொது மக்களே கவலைப்பட வேண்டியவர்கள்! 0

'சமயச் சார்பற்ற (Secular) அரசு என்றால் என்ன? இப்பொழுது நடக்கும் அழிம்புதான் என்ன?

இந்திய அரசு *சமயச் சார்பற்ற* (Secular) *அரசாக* விளங்க வேண்டும் என்று இந்திய அமைப்பியல் சட்டம் கூறுகிறது.

'சமயச் சார்பற்ற அரசு' என்பதற்குப் பலரும் பலவாறு, அவரவர்களுக்கு இயைந்த வகையில் பொருள் கொள்ளுகின்றனர்.

O *1930*-இல் **எம். என். இராய்** இப்படிப் பொருள் கூறினார்.

"இங்கு வாழும் ஒவ்வொரு குடிமகனுக்கும் தான் விரும்பும் சமயத்தைப் பின்பற்ற உரிமை உண்டு என்பது செக்குலரிசத்தின் பொருள் அன்று. மாறாக **மதத்தின் கட்டுப்பாட்டிலிருந்து மக்கள் விடுபட வேண்டும்** என்பதே அதன் பொருளாகும்"

O குடியரசுத் தலைவர் ***இராசேந்திர பிரசாத்:***

"இந்த நாட்டில் வாழும் ஒவ்வொருவரும் தனக்கு விருப்பமான சமயத்தைத் தேர்ந்தெடுத்துப் பின்பற்றிட முழு உரிமை பெற்றுள்ளனர் என்பதே அதன் பொருளாகும்"

— The statesmen — 18-11-'57.

O "நாம் சமயச் சார்பற்ற ஓர் அரசை உருவாக்கத் திட்டமிடுகிறோம். **ஒரு வகுப்போ, ஒரு குழுகாயமோ, ஒரு கட்சியோ, மற்றவர் உரிமைகளை விழுங்குவதை அனுமதிக்காத நிலைகொண்ட 'செக்குலர்' அரசை** அமைக்க முயல்கிறோம்.

சவகர்லால் நேரு. (Hindustan Times—3-2-'48.)

O "நமது அரசு ஒரு செக்குலர் அரசு என்பதன் பொருள், எந்த ஒரு மதத்திற்கும் கட்டுப்பட்டதாக எந்த ஒரு மதத்தையும் சார்ந்ததாக அரசு இருக்காது என்பதே ஆகும்."

சவகர்லால் நேரு. (Hindustan Times—4-6-'48.)

O நமது அரசு சமயச் சார்பற்ற அரசு. இப்படிச் சொல்லும் போது, ஒழுக்க மாண்புகள் மீதோ, மதத்தின் மீதோ, நமக்கு நம்பிக்கை இல்லை என்பது பொருள் அன்று. மாறாக, இங்கு மதம் முற்றிலும் தன்னுரிமையாக இயங்கவல்லது. **எல்லா மதங்களும் கலைப் பண்பாடுகளும் இங்கு வாழ உரிமை பெற்றுள்ளன, என்பதையே 'செக்குலர்' என்கிறோம்,"**

— **நேரு.** (Hindustan Times. — 18-4-'49.)

O "சமயச் சார்பற்ற அரசு என்றால் இங்கிருக்கும் **ஒவ்வொரு வகுப்பும் தனி ஆள்களும் தமக்கே உரிய வழியில் எந்த ஒரு மதத்தையும் கலைப் பண்பாட்டையும் பின்பற்ற முழு உரிமை உண்டு** என்பதே பொருளாகும்."

— **நேரு.** (Hindustan Times, — 3-6-50.)

O " 'செக்குலர்' என்னும் சொல்லுக்கு, ***'ஆன்மீக' மாண்புகளைப் பல்வேறு வகையில் அடைய அனைவர்க்கும் உரிமை உண்டு*** என்பதே பொருள்."

பர். இராதா கிருட்டிணன்.

(Nation, Culture of India — முன்னுரை.)

O நான் *அதிகார* முழுமையாகவே கூற விரும்புகிறேன். செக்குலரிசம் என்பதற்கு மதப் பற்றின்மை என்பது பொருளன்று. மாறாக, அனைத்துச் சமயங்களுக்கும் மதிப்பு அளிக்கப் பட வேண்டும்; ***குறிப்பிட்ட எந்த ஒரு மதத்தின் பக்கமும் அரசு சாய்ந்து விடாது*** என்பதே பொருள்."

பர். இராதா கிருட்டிணன்.

(States Men 21-8-61.)

O "செக்குலர் அரசு என்று கூறும்போது அதன் பொருள் இதுதான். ***பாராளுமன்றம் ஒரு குறிப்பிட்ட (மதக்) கருத்தை மக்கள் மீது திணிக்கக் கூடியதாக இருக்கக் கூடாது*** என்பதே பொருள்.

பர். அம்பேத்கர். பாராளுமன்ற உரை. *1951.* இந்துச்சட்ட உரையின் பொழுது.

O "ஒவ்வொரு குடிமகனும் — ***அவர் யாராக இருந்தாலும் சரி — சம உரிமையுடனும் சம வாய்ப்புடனும் இங்கு வாழ உரிமை உண்டு*** என்பதே மதச்சார்பற்ற அரசு என்பதற்குப் பொருள்.

— ***மௌலானா ஆசாத்.***

(Hindustan Times 29-1-'49)

O "மதச் சார்பற்ற அரசு என்பதன் பொருள், ஒவ்வொரு குடிமகனுக்கும், அவனுடைய இனம், சமயம், சாதி ஆகியவை பற்றிப் பொருட்படுத்தாமல் அவன் உரிமையாக இயங்க முழு உரிமையை இந்திய அரசு அளிக்கும் என்பதே ஆகும்."

—***மௌலானா ஆசாத்.***

(Hindustan Times. — 21-1-'49.)

O "சாதி, மத, இனத்தின் அடிப்படையில் குடிமக்களைப் பாகுபாடு செய்யாமல் அவர்களுடைய நம்பிக்கையுள்ளர் என்ற முறையில் நாம் இயங்கவில்லையானால் (நாம் ஆளுதற்கு) அருகதையற்றவர்களாவோம்."

— பட்டேல் (Hindustan Times 17-1-'48.)

O "நாம் 'செக்குலர்' அரசாக விளங்குகிறோம். இந்த அரசில் சிறுபான்மை என்ற சிந்தனையே இன்றி, எல்லாரும் மகிழ்ச்சியாக, சம உரிமை பெற்ற குடிமக்களாக வாழ்வார்கள்"

—கோவிந்த வல்லப பந்த்.

— (Hindustan Times. 18-3-50.)

(தொடர்ச்சி 8-ஆம் பக்கம்)

Scanned with CamScanner

அனைத்து நிலையிலும் இந்தியா நாறிக் கிடக்கிறது!

அண்மையில் சய்சல்மேர் நகரில் **கர்ணபீல்** என்பவன் படுகொலை செய்யப்பட்டான். அவன் ஒரு கொள்ளைக்காரன். ஆனால் சீர்திருந்தி, கொள்ளைத் தொழிலை விட்டுவிட்டு அரசின் மன்னிப்பையும் ஆதரவையும் பெற்று, உழவுத் தொழிலைச் செய்து வந்தான். ஆயினும் கொள்ளைக் கூட்டங்களிடையே நிலவிய உட்பூசல் காரணமாக ஒரு கூட்டம் தொடர்ந்து அவன் மீது பகைமை பாராட்டி வந்தது. அவனைக் கொன்று பழி தீர்த்துக் கொள்ள நேரம் பார்த்துக் காத்திருந்தது.

சில நாள்களுக்கு முன்புதான் சய்சல்மேர் நகரின் நடுப் பகுதியில் பட்டப்பகல் வேளையில் கர்ணனை அவன் பகைவர்கள் படுகொலை செய்து பழி தீர்த்துக் கொண்டார்கள். வெட்டுண்ட உடல் தரையில் கிடக்க, தலையை மட்டும் வெற்றி அடையாளமாக எடுத்துச் சென்றார்கள்.

இவ்வளவுக்கும் படுகொலை நடந்த இடத்திலிருந்து காவல் நிலையத்திற்கு 900 அடி தொலைவு கூட இருக்காது. 'பழிக்குப் பழி' என்று கூறி, ஒருவரையொருவர் கொன்று தீர்ப்பது, இந்தப் பகுதியில் அப்படியொன்றும் புதுமை இல்லை. ஆனால் மக்கள் நடமாட்டம் மிக்க நகரின் தலையான சாலையில், பகல் வேளையில் காவல் நிலையத்திற்கு மிக அருகில், அதிலும் கர்ணனைப் போன்ற மக்கள் அன்புக்குரிய ஒருவர் கேட்க யாருமின்றிப் படுகொலையானது அனைவருக்குமே மனவுறுத்தலாக இருந்தது!

கொலையாளிகள் காவலரை முன் கூட்டியே விலை கொடுத்து வாங்கி விட்டிருக்க வேண்டும். இல்லாவிட்டால் அவ்வளவு துணிச்சலாக அவர்கள் நடந்து கொண்டிருக்க மாட்டார்கள். சய்சல்மேரில் இருக்கிற காவல்துறை அதிகாரிகள் பலருக்குமாகச் சேர்த்து முன்பணமாக இரண்டு இலக்க உருபா கொடுத்து விட்டதாகப் பேசிக் கொள்கிறார்கள். சந்தடியெல்லாம் அடங்கி இதுபற்றி வழக்கு எதுவுமில்லாமல் போனதும் மேற்கொண்டு இரண்டு இலக்கம் கொடுத்து விடுவார்களாம். இந்தக் கொலைக்காக யாருமே தண்டிக்கப் படமாட்டார்களாம். போயும் போயும் ஒரேயொரு கொலைக்குத் தண்டனை தருவதா? நம்முடைய அரசு அதற்கெல்லாம் முன்வரும் என்று நினைக்கிறீர்கள். அப்படியானால் உங்களை ஒரு பச்சைக் குழந்தை என்றுதான் சொல்ல வேண்டும்.

அரசை நடத்துகிற ஆள்கள் சிலர் தாம் மானம், மதிப்புகளையெல்லாம் இழந்து விட்டிருப்பதாக உங்களுக்குத் தோன்றலாம். உண்மையில் இந்த அரசுக்கு என்றோ மானம், மதிப்பு எல்லாம் இல்லாமல் போய்விட்டன. மதிப்பு போனபின் ஞாயம் எங்கிருந்து வரும்?

நாள்தோறும் நாம் வானொலி கேட்கத் தவறுவதில்லை 'செய்தி' என்னும் பெயரில் வெறும் பொய்களைத் தன் சொந்த மக்களிடமே இந்த அரசு இப்படி அவிழ்த்துக் கொட்டினால் இறுதியில் இந்த நாட்டின் நிலை என்னாகும்?

பொய்கள்! வெறும் பொய்கள். பொழுது விடிந்து பொழுது போகும் வரை இப்படிப் புளுகித் தள்ளிக் கொண்டிருந்தால் மக்கள் மட்டும் உண்மையாக நடந்து கொள்வார்கள் என்று எப்படி எதிர் பார்க்க முடியும்? இங்கே இருக்கிற கையூட்டு ஊழல் இப்படி. தில்லியில் உட்கார்ந்து கொண்டு நம்மையெல்லாம் ஆண்டு கொண்டிருக்கிறார்களே அவர்களுடைய செய்தி என்ன?

நம்முடைய ஆட்சியாளர் எவ்வளவு தொலைவு ஊழலில் கிடந்து உழலுகிறார்கள். அவர்களால் இந்த நாடு எந்த அளவுக்கு நாறிப் போயிருக்கிறது என்பதெல்லாம் அனைவர்க்கும் தெரியும். ஏமாற்றுகளிலேயே மூழ்கிப் போய் ஒழுக்கமின்மையே வாழ்க்கை முறையாக ஆகிவிட்டதால்தான் அவர்களுக்கு எதுவுமே உறைப்பதில்லை. சிற்றூர்ப் புறங்களில் மக்களுக்குக் குடிக்கத் தண்ணீர் கிடைப்பதில்லை. கால்நடைகளுக்கும் கூடத் தண்ணீர் இல்லை. ஊர்ப்புறங்களெல்லாம் ஈரப்பசையில்லாமல் வறண்டு கிடக்கின்றன. இவை பற்றியெல்லாம் யாராவது கவலைப் படுகிறார்களா?

ஆனால் அதே சமயம், இராசீவ் ஏதோ கூட்டம் கூடிப் பேசுவதற்காகவென்றே அவ்வூரில் உள்ள ஒரு மாளிகைக்கு வந்துபோனதாக அறியப் படுகிறது. மாளிகையில் வந்து உட்கார்ந்து பேசுவதற்காக அவர் தம்அமைச்சர்களை யெல்லாம் கூட்டிக் கொண்டு வந்தாராம். அவர் வந்து போனதற்கே ஏகப்பட்ட செலவாயிற்றாம். எதற்காக இந்த வெட்டிச் செலவு? தில்லியில் பேசமுடியாத அப்படியென்ன பெரிய செய்தியைப் பேசி முடிக்க அங்கேயிருக்கிற மாளிகைக்கு வந்தார்கள்? அதற்கு ஆன செலவில் ஒரு துளியை அங்குள்ள வறட்சியைப் போக்குவதற்குச் செலவிட்டிருந்தால் கூட அங்குள்ள கால்நடைகளில் சில உயிர் பிழைத்திருக்கும்.

ஆனால், அதைப்பற்றியெல்லாம் யாருக்குக் கவலை? அங்கு போனது போதாது என்று இவர் தம் மாமியார் வீட்டு உற்றம் சுற்றத்துடன் ஏதோ ஒரு தீவுக்கும் மகிழ்ச்சியாகப் போய்ப் பத்து நாள்கள் நிறைவாக இருந்து விட்டு வந்தாராம். அவர் விடுமுறையை நுகர்வதற்காகப் போயிருப்பதாகச் சொன்னார்கள். சிறிதளவாகிலும் கூச்சம் இருந்தால் இப்படியெல்லாம் நடந்து கொள்ளத் தோன்றுமா?

சில நாள்களுக்கு முன் அம்மாவட்டத்தில் இன்னொரு நிகழ்ச்சி நடந்தது.

Scanned with CamScanner

தித்வானாவுக்கும் நாகோருக்கும் இடையே போய்வரும் இராசத்தான் மாநிலப் போக்கு வரத்துக் கழகப் பேருந்து ஒன்றைக் கட்டணச்சீட்டு ஆய்வாளர் ஒருவர் இடையில் நிறுத்தி ஆய்வு செய்திருக்கிறார். பேருந்தில் எண்பதுக்கும் அதிகமான பேர்கள் இருந்திருக்கிறார்கள். எல்லாரும் முறைப்படி கட்டணம் செலுத்தியிருந்திருக்கிறார்கள். ஆனால் எவரிடமும் கட்டணச் சீட்டு இல்லை. 'சீட்டு இன்னும் அச்சடித்து வரவில்லை; அதனால் யாருக்கும் சீட்டுக் கிடையாது' என்று ஓட்டுநர் கூறி விட்டாராம். பயணிகள் குறைந்த அளவு தலைக்கு 18 உருபா கட்டணம் செலுத்தியிருந்தார்கள் என்றால் ஓட்டுநர் எவ்வளவு சம்பாதித்திருப்பார் என்று நீங்களே கணக்குப் போட்டுப் பார்த்துக் கொள்ளுங்கள்! அதனால், அந்த நாணயமான ஆய்வாளர் இதை அறிந்து அதிர்ச்சி அடைந்து விட்டார். உடனே ஒரு முறையீடு எழுதி அதில் சான்று கையெழுத்துகளும் வாங்கிக் கொண்டு பேருந்திலிருந்து இறங்கினார். முறையீட்டை மேலிடத்தில் கொடுப்பதற்காக மலையியங்கியில் ஏறிப் பறந்தார்.

ஆனால், ஆய்வாளர் மேலிடத்துக்குப் போய்ச் சேரவில்லை. அவருடை வண்டியை, பேருந்து ஓட்டுநரின் ஆள்கள் இடைமறித்து நிறுத்தினார்கள். ஆய்வாளரை வண்டியிலிருந்து இறக்கி நன்கு அடித்தார்கள். அவரெழுதிய முறையீட்டை அவர் கையாலேயே கிழித்துப்போடச் செய்தார்கள். அது மட்டுமா? அவர் தமது 'அடாத' செயலுக்காக ஓட்டுநரிடம் மன்னிப்புக் கேட்க வேண்டும் என்றும் தீர்ப்பளித்தார்கள்.

சிறிது நேரத்திற்கெல்லாம் அந்தப் பேருந்து அங்கு வந்து சேர்ந்தது. ஓட்டுநர் வெற்றிப் பெருமிதத்துடன் கீழே இறங்கி வந்தார். ஆய்வாளரை இளக்காரமாக ஒரு பார்வை பார்த்து, 'மனத்தில் பெரிய அரிச்சந்திரன் என்ற நினைப்பா உனக்கு? பெரிய பெரிய முதலாளிமார்களும் திரைப்பட நடிகர்களும் தலைமையமைச்சரைக் கைக்குள் போட்டுக் கொண்டு சம்பாதிக்கிறார்கள். ஏன், தலைமையமைச்சர் ராசீவே போர்க்கருவி வாங்கிய ஊழலில் ஏகப்பட்ட பணம் பார்த்து விட்டதாகச் சொல்கிறார்கள். நான் ஏதோ 'நாலுகாசு' சம்பாதித்தால் அதுவும் ஒரு சின்ன பேருந்துப் பயணத் தொடர்பான செய்தியில் — உனக்கு எங்கே வலிக்கிறது?' என்று ஓட்டுநர் ஓர் அதட்டலுடன் கேட்டாராம்.

அந்த ஊரில் தலைமுறை தலைமுறையாக வந்த தொழில் நிலையில் ஒருவர் தம் குடும்பம் அனைத்தையும் ஈடுபடுத்தி ஒரு செங்கல் சூளை போட்டிருந்தார். அந்நிலையில் அவ்வூர்ப்பகுதிக்கு அதிகாரிகளும் பெருமகர்களும் வந்தால் தங்குவதற்கென்று சில இலக்கங்கள் செலவு செய்து விடுதியொன்றைப் பொதுப் பணித்துறை அங்கே கட்டியது. அதிகாரிகள் அங்கு வந்து வசதியாகத் தங்கிச் செல்லத் தொடங்கினார்கள். ஆனால், பயணியர் விடுதிக்குச் சிறிது தொலைவிலிருந்த செங்கற் சூளையிலிருந்து எழுந்த புகை அவர்களைத் தொந்தரவு செய்தது. அதனால் செங்கற் சூளைகளை வேறு பகுதியில் போடுமாறு அதிகாரிகள் கட்டளையிட்டனர். ஆனால் செங்கற் சூளைக்காரர்கள் அந்தக் கட்டளையை நிறைவேற்ற இயலவில்லை. ஏனெனில், அவர்களுக்கு வேறு போக்கிடம் இல்லை, ஆனால் அதிகாரிகள் ஒரேயடியாக அவர்கள் அனைவரும் அந்த இடத்தை விட்டு அகலும்படி செய்து விட்டார்கள். எனவே, செங்கள் சூளைக்காரர்கள் வீடிழந்து, நிலமிழந்து, சூளைகளையும் இழந்து நொடித்துப் போய் விட்டார்கள்.

தங்களுக்கு இழைக்கப்பட்ட கொடுமைக்கு ஞாயம் கேடக அவர்கள் அரசு மேலிடங்களைக் கால் கடுக்க அணுகிப் பார்த்தார்கள். மூடிக்கிடந்த பெரிய பெரிய கதவுகளையெல்லாம் இடைவிடாமல் தட்டிப் பார்த்தார்கள். அரசு அவர்களிடமிருந்து பறித்துக் கொண்ட நிலத்தைத் திருப்பித்தரவில்லை. அவர்கள் எழுதிக் கொடுத்த முறையீடுகளுக்கு அது விடை கூடத் தரவில்லை. மாறாக, செங்கற் சூளைக்காரர்கள் தங்கள் நிலத்தில் புகுந்து விடாமலிருக்கக் காவலும் போடப்பட்டது.

இதை எதிர்த்து வழக்காடலாம் என்றால் ***எந்த அறமன்றத்திற்குப் போவது? அப்படியே போனாலும் அங்கு ஞாயம் கிடைக்குமென்று நினைக்கிறீர்கள். ஞாயம் என்று இப்போது இங்கே எதுவும் இல்லை. எல்லாமே வெறும் பித்தலாட்டந்தான்.*** ஏழைகளின் வழக்கைக் கேட்டுத் தீர்ப்பளிக்க இங்கேயிருக்கிற அறமன்றங்களுக்கெல்லாம் நேரம் இல்லை. ஆனால் அறமன்றங்களை மட்டும் குறை சொல்லி என்ன பயன்?

இங்கே எல்லாமே அடிவேர்வரை புரையோடிப் போய் விட்டது.

எடுத்ததற்கெல்லாம் அறமன்றத்துக்குத்தான் போகவேண்டுமென்றால் எத்தனைப்பேர் அறமன்றத்துக்குப் போக வேண்டியிருக்கும்? எத்தனைப் பேரால் அப்படிப் போக முடியும்?

எடுத்துக் காட்டுக்கு ஒரு செய்தி. மேலே சொன்ன சிற்றூரில் ஒருவன் இருந்தான்; அவன் இறந்தும் போனான். வறுமையில் தவித்த அவன் மனைவி வறட்சிப் பணியில் தனக்கும் ஒரு வேலை போட்டுத்தர வேண்டுகை விடுத்தாள். இருபத்தைந்து உருபா கையூட்டுக் கொடுத்தால், வேலை போட்டுத் தருவோம் என்றார்கள். அவள் தன்னிடமிருந்த ஏனம், பண்டங்களை யெல்லாம் அடமானம் வைத்து அந்தத் தொகையைக் கொடுத்தாள். வேலை கிடைத்தது. ஆனால் நாற்பத்தைந்து நாள்கள்

(தொடர்ச்சி 8-ஆம் பக்கம்)

Scanned with CamScanner

இவர்கள் என்ன சொல்கிருர்கள்?

இராசீவ் ஆட்சியில் சிற்றூர்ப்புறங்கள் புறக்கணிக்கப் படுகின்றன. நகர்ப்புற நடுத்தரப் பிரிவினரை நிறைவுப் படுத்துவதே அரசாட்சியின் வேலையாகி விட்டது. வேளாண்மைப் பணிகளுக்கு மின்சாரம் கிடைக்காமல் உழவர்கள் தவிக்கிருர்கள். ஆனல் கணினி (கம்ப்யூட்டர்)களும், தொலைக் காட்சி (டெலிவிசன்)களும் மின்சாரத்தை விழுங்கிக் கொண்டிருக்கின்றன.

லோகதளம் தலைவர் அசித் சிங்.
(பீகார் 7-2-88)

இலங்கையில் இந்தியப் படையின் தலையீடு ஞாயமற்றது. இந்த நடவடிக்கை தோல்வியடைந்து விட்டது.

ஊழல், வேலையில்லாத் திண்டாட்டம், பணவீக்கம் ஆகியவை இந்திராக்கட்சி மீது மக்கள் வைத்திருந்த நம்பிக்கையைப் போக்கி விட்டன. தற்போது படித்து விட்டு வேலை கிடைக்காத இளைஞர் தொகை 2 கோடியே 40 இலக்கம் ஆகும்.

— வி. பி. சிங். (பீகார் 7-2-88)

(5-ஆம் பக்கத் தொடர்ச்சி)

O "ஒரு 'செக்குலர்' அரசில், மக்கள் எந்த சமயத்தைப் பின்பற்றினலும், அவர்களுக்கு முழுப் பாதுகாப்பும் உரிமையும் அளிக்கப் பட வேண்டும், அவர்கள் ஏற்றத்தாழ்வாக நடத்தப்படக் கூடாது."

— அனந்தசயனம்.
அரசியல் அமைப்பியல் சட்ட உரை,

O "'செக்குலர்' அரசு என்ருல், குறிப்பிட்ட மதத்தைத் திணிப்பதும், அம் மதக்கல்வியைப் பயிலும்படி கட்டாயப் படுத்துவதுதான் தவறு."

— முகமது இசுமாயில்.
அரசியல் அமைப்பியல் சட்ட உரை.

O "குறிப்பிட்ட மதத்திற்கு மட்டும் ஆதரவு அளித்து, வேறுபாடாக நடந்து கொள்ளக் கூடாது என்பதே அதன் பொருளாகும்"

— அனந்த சயனம்
அரசியல் அமைப்பியல் சட்ட உரை.

O "செக்குலர் அரசு என்ருல், மதத்திற்கு மாருன அரசு என்று பொருளன்று. மாருகப் பரந்த மனப்பான்மை கொண்ட ஒருதலைச் சார்பாக நடந்து கொள்ளாத — எந்த ஒரு குறிப்பிட்ட மதத்திற்கும் கட்டுப்படாத — அதே சமயத்தில் அனைத்துச் சமயங்களும் வளர்வதற்குத் தேவையான — பொருத்தமான சூழ்நிலையை ஏற்படுத்தக் கூடிய அரசு என்று பொருள்.

பர். சாகீர் உசேன் பாராளுமன்ற உரை.
(தொகுப்பு எம்.ஏ.சே. சமரசம். திசம். '87)

உருசியாவில் செய்தித்தாள் உரிமைகள் கட்டுப்படுத்தப்பட்டுள்ளன.

உருசியாவில் செய்தித்தாள்களுக்கான உரிமைகள் மிகவும் கட்டுப் படுத்தப் பட்டுள்ளன.

அங்கு எவரும் தனிப்பட்ட முறையில் எந்த ஒரு செய்தியிதழையோ, தாளிகையையோ தொடங்கி நடத்த உரிமையில்லை. எந்தவோர் இதழும் எந்தத் தனிப்பட்டவருக்கும் சொந்தமாக இல்லை. செய்தித்தாள் பதிப்பாளர்களில், பொதுவுடைமைக் கட்சியும், அரசு உறுப்புகளும், தொழிற் கழகங்களும், கூட்டுறவு நிறுவனங்களும், மக்கள் தொடர்பு நிறுவனங்களும், தொழில் துறைக் கழகங்களும், அறிவியல் மற்றும் தொழில்நுட்பக் கழகங்களும், திருச்சபைகளும், பிற கழகங்களுமே தொடர்பு கொள்ள முடியும்.

செய்தியிதழ்களில் வரும் செய்திகளும் பின் வருமாறு கட்டுப் படுத்தப் பட்டுள்ளன.

1. போர் முறைகளைப் பரப்புவது கூடாது. 2. நிற, இன அல்லது குல வழி இனப்பகைமையைத் தூண்டும் செய்திகளை வெளியிடக் கூடாது. 3. **சமய வழிபாடு செய்பவர்களின் உணர்ச்சிகளைப் புண்படுத்துவது கூடாது.** 4. வன்முறையை மேற்கொள்ளுமாறு அல்லது சோவியத்து அரசை எதிர்ப்பது அல்லது தகர்க்குமாறு அறை கூவல் விடுவது கூடாது. 5. பொய்யான, அல்லது சரிபார்த்துக்கொள்ளாத செய்திகளை வெளியிடுவது கூடாது.

(7-ஆம் பக்கத் தொடர்ச்சி)

வேலை செய்தும் அவற்றுக் குண்டான கூலி அவளுக்கு வந்து சேரவில்லை. இவ்வளவுக்கும் அவளுக்குச் சேர வேண்டியது என்னவோ நாளொன்றுக்கு இரண்டு உருபா முப்பது காசுகள்தாம். மொத்தம் உரு. 103.50.

'ஏன் கூலி கிடைக்கவில்லை' என்று கேட்டதற்கு, அவளிடம் வேலை வாங்கிய அதிகாரி சயப்பூரிலிருந்து அதற்கு அனுமதி வரவேண்டும் என்று சொல்லி விட்டார். ஒரு வழியாக 'அவளுக்குரிய கூலிப்பணம் வந்தபோது அதிகாரி அதிலிருந்து தனக்குச் சேரவேண்டியது தென்று பெரும் பகுதியை, எடுத்துக் கொண்டு விட்டார். ஆக, நாற்பத்தைந்து நாள்கள் வேலை செய்ததற்குக் கூலியாக அவள் கையில் விழுந்தது கொஞ்சம் சில்லறைக் காசுகள் தாம். அடுத்த சம்பள நாள்வரை அவள் அந்தக் காசை வைத்துத்தான் சமாளித்தாக வேண்டும். இப்பொழுது சொல்லுங்கள் அவள் இதற்காக அவள் எந்த நீதி மன்றத்துக்குப் போவது?

— இக் கட்டுரை சசுவந்த் சிங் எழுதியதைத் தழுவிச் சுருக்கியது.

அடிப்படை 'தினமணி' 22-2-88

Scanned with CamScanner

நாடாளுமன்ற சட்டமன்ற அவைத் தலைவருக்குள்ள அதிகாரங்கள் சிறுபான்மைக் கட்சிகளின் நலன்களைக் காக்கவே! ஒடுக்க அல்ல!

நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களின் மனச் சான்றைக் கட்சித் தாவல் சட்டம் கொன்று விட்டது. அவர்கள் மனத்தில் ஓர் அச்சத்தை உருவாக்கியுள்ளது.

ஆளுங் கட்சி உறுப்பினர்கள் அனைவரையும் அதிர்ச்சியின் மூலம் அமைதி அடையச் செய்யக் கூடாது. அப்படிச் செய்தால் நம்பகத் தன்மை போய் விடும். ஆளுங்கட்சிக் குள்ளேயே ஓரளவு எதிர்ப்பு இருக்க வேண்டும். கடந்த காலத்தில் நாடாளு மன்றத்தின் மனச் சான்றாக விளங்கிய ஒரு குழு எப்பொழுதும் ஆளுங்கட்சிக்குள் இருந்தது. நாடாளுமன்றத்துக்கு ஆட்சி கடமைப்பட்டு இருப்பதை இந்தக் குழு உறுதி செய்தது. ஆனால் இன்று இந்த நிலை இல்லை. தற்பொழுது நாடாளு மன்ற உறுப்பினர்களுக்குச் சட்டப்படி மனச் சான்று இல்லாமல் செய்யப்பட்டு விட்டது.

இனி, மக்களவைத் தலைவர்களின் பணி என்பது தருக்கங்களை அனுமதிப்பதாகும். அவற்றிற்கு முட்டுக்கட்டை போடுவது அவர் வேலையன்று. வன்முறை அரசுக்கு ஒரு மாற்றே நாடாளு மன்றம் ஆகும். தருக்கங்கள் ஒழுங்காக நடப்பதை அவைத்தலைவர் உறுதி செய்ய வேண்டும். உறுப்பினர்கள் கருத்துகள் சொல்வதை அவர் துண்டித்தால், அல்லது தடுத்தால் நாடாளுமன்றத்தின் மீது மக்களுக்குள்ள நம்பிக்கை குறையும்.

நாடாளுமன்ற நெறிமுறைகள் என்பவை அறமன்ற நெறிமுறைகளைப போன்றவை அல்ல. நாடாளுமன்றம் என்பதோ சட்டமன்றம் என்பதோ அரசியல் அவைகளே ஆகும். குறிப்பிட்ட ஒரு சூழலில் எது சிறந்தது என்பதையே அவைத் தலைவர் பார்க்க வேண்டும். அவைகளின் நெறி முறைகள் தடையாக இருக்கும் நிலையில், அவற்றைத் தற்காலிகமாக நீக்கம் செய்யும்படி அவர் கேட்டுக் கொள்ளலாம். அவைத் தலைவர் நடுவராகச் செயல்படுவதை விட, காவலராகவே இருக்க வேண்டும்.

இந்தியாவில் நாடாளுமன்ற நடைமுறை நெறிகள் வகுக்கப்பட்டபோது, அவைத் தலைவருக்கு மற்ற நாடுகளில் இருப்பதை விடக் கூடுதலாகவே அதிகாரங்கள் வழங்கப்பட்டன. அதனால் அவர் அவையின் ஊழியராகச் செயல் படாமல், ஒருவகையான அதிகாரச் செல்வர் (பிரபு) போல ஆக்கப் பட்டு விட்டார். ஆனால், இந்தக் கூடுதல் அதிகாரங்கள் அவர் வகையில் செயல்படாமல், அவைக்குக் கிடைக்கும் வகையில், நெறிமுறைகளைத் திருத்தியமைக்க வேண்டும்.

அவையில் உள்ள சிறுபான்மைக் குழுக்களைக் அவற்றின் உரிமைகளைக் காக்கவே இந்த அதிகாரங்கள் அவைத்தலைவருக்கு வழங்கப்பட்டன. ஆனால் அண்மையில் இந்த அதிகாரங்கள் சிறுபான்மைக் குழுக்களை ஒடுக்கவே பயன் படுவதைக் காணலாம். எப்படியும் மக்களுக்கு அவைத் தலைவர் ஒரு தலைப் பார்வையோ, உள்நோக்கமோ, அச்சமோ இன்றிச் செயல்படுகிறார் என்ற உணர்வு ஏற்பட வேண்டும்.

— எசு. எல். சக்தர்

முன்னாள் மக்களவைத் தலைமைச் செயலர்.
புதுதில்லி, பிப்-22 செய்தியாளர் கூட்டத்தில்.

குடியரசு அமைப்பு முறையை இராசீவிடம், கற்றுக் கொள்ள வேண்டுமாம், எக்டே. சனார்த்தன பூசாரி சொல்கிறார்.

'கருநாடக முதல்வர் எக்டே தமது அணுகு முறையை இப்போது கூட மாற்றிக் கொள்ளலாம். ஒன்றும் அதிகக் காலமாகி விடவில்லை. எக்டே, நடுவில் ஆளும் இந்திரா கட்சியிடம் குறிப்பாகத் தலைமையமைச்சர் இராசீவிடம் குடியரசு (சனநாயகம்) குறித்துப் படிப்பினை பெற்றுக் கொள்ளலாம்' என்று பேசினார், நடுவண் பொருள் துறைத் துணை அமைச்சர் சனார்த்தன பூசாரி. எப்படியிருக்கிறது பூசாரியின் அறிவுரை! 0

தென்மொழி அன்பர்களுக்கு ஒரு நற்செய்தி !

சென்னையில் பெரு விழா !

பாவலரேறு பெருஞ்சித்திரனார்

அவர்களின் மிகச் சிறந்த வாழ்வியல் நூல் !

செயலும் செயல்திறனும்

நூல் வெளியீட்டு விழா.

தென்மொழி அன்பர்கள் பலரும்,
மொழி, இன, நாட்டு நல அறிஞர்களும்
கலந்து கொள்கின்றனர்.

தேவ நேயப் பாவாணர் நூல் அரங்கில்
19-3-88 அன்று மாலை 4 மணியளவில்.

ஏறத்தாழ 400 பக்கங்கள் ! விலை 35 உரு.
விழாவில் உரு 30க்குக் கிடைக்கும் !

அன்பர்கள் அனைவரும் தவறாமல் வருக !

செந்தமிழ்நூல் வெளியீட்டுக் குழு.
சென்னை-5.

வீர மறத்தியின் வீறுரை!

ஆழி சூழ் உலகின் ஒரு புள்ளியின் முனையை நான் பார்க்கும் முன்பே, தங்கள் விடுதலை உணர்விலும், மொழிப்பற்றிலும், இன உணர்விலும் நாட்டு பற்றிலும் கொள்கையிலும் கருவிலேயே ஊறிப் பிறந்தவள் நான்.

அன்று முதல் இன்று வரை, தங்களின் விடுதலை உணர்வில் கொஞ்சமும் கலங்காது தளராது, விழிப்பூட்டியும், உணர்வூட்டியும் எழுச்சியூட்டியும் பேசிப் பேசி, எழுதி எழுதிக் கூட்டம் கூட்டிக் கழகம் அமைத்து, மாநாடு போட்டுப், போராட்டம் நடத்திச் சிறை சென்று இடித் துரைத்து, எடுத்துரைத்துப் பட்டி மன்றம் பாட்டரங்கம் கூட்டிக் கட்டிக்காக்கும், நம் தமிழினம் தங்கள் முயற்சியில் மலரும் என்றே எண்ணியிருந்தேன்.

தங்கள் செயலுக்குக் கை கொடுத்துக் கால் கடுக்கப் பின் தொடர்ந்து, தோள் கொடுத்துத் தூக்கிக் கொள்ள, கொட்டு முரசு கொட்டிக் கூக் குரலிட்டுத் தமிழகம் பெற்று விடத் துடிக்கும் இளைஞர்கள்,

ஏறுநடை போட்டு, எக்காளம் ஊதிச் சூளுரைகள் கூறிப் புறப்படும் நாளை எதிர் நோக்கிக காத்திருக்கும் இக்கட்டான இவ்வேளையில் தாங்கள்,

"இளைஞர்களின் கையில் எதிர்காலத் தமிழகம்" என்று **'தமிழ் நில'த்தில்** (இதழ் எண் 100) இல் எழுதியிருந்ததைப் படித்து, ***வியந்தேன்! விழித்தேன்! அழுதேன்!***

"பெற்று விடவேண்டும் — தமிழகம்" என்ற கொள்கை குரல் வற்றியதோ! அன்றி,

'ஏடாயிரங் கோடி எழுதி குவித்தாலும்,
இடித்திடித்து உரைத்திட்டாலும்,
*'பூடாயிரங் கோடி பிழிந்து மருந்திட்டாலும்
நாடு நலம் பெறுதல் குதிரை கொம்பே!'*
என்றெண்ணினீரோ! — 'அன்றி,

*'ஆட்டிப் படைக்கும் அரசுக்கும் ஆரியருக்கும்
ஈட்டியால் இறுதியுரை'* தீட்டி விட்டு —
ஓய்ந்து விட்டீரோ! அன்றி,

*'வெட்டொன்றுய்த் துண்டிரண்டாய்
விடுதலையே வேண்டும்'* என்று —
வீர முழக்கமிட்டு வீறுப் போய்
—விட்டது என எண்ணினீரோ!

**'ஆண்டு நூறுருனாலும் அன்னைத் தமிழ்நாடு,
வேண்டும் விடுதலை எண்ணம் விலக்கோம்'**
என்று,

'சாகின்ற செந்தமிழரைச்,

சாகா விடுதலைக்கு, அறை கூவி அழைத்து விட்டு, விடுதலைகேட்டு எந்த நலத்துக்கும் பிடித்த

இந்தியப் படைகளால் 1987 இறுதிவரை இலங்கையில் அழிவுகள்.

(ஒரு கணக்கீடு.)

1987 அக் – 10 முதல் *1987* திசம். இறுதி வரை இந்திய அமைதிப் படை என்னும் பெயரில் இயங்கிவரும் தமிழின அழிவுப் படையால் இலங்கையில் தமிழர்களுக்கு நேர்ந்துள்ள அழிவுகளின் உண்மை விளக்கங்கள் இவை. ஆனால், இந்திய வானொலியும் தொலைக்காட்சியும், அரசுச் சார்பு செய்தித் தாள்களும் அன்றாடும் திட்டமிட்டு அவிழ்த்து விடும் பொய்ச் செய்திகள் வேறாக இருக்கின்றன என்பதை அன்பர்கள் கவனிக்கவும்.

- O பொதுமக்களின் இறப்புகள் — *2000*க்கு மேல்.
- O கற்பழிக்கப்பட்ட பெண்கள் — *600* க்கு மேல்.
- O சொத்துகளின் அழிவு விளக்கம் எத்தனைக் கோடி என்று கணக்கிடப் படவில்லை.
- O தமிழீழ விடுதலைப் புலிகளின் தரப்பில் — *168* பேரே வீரச்சாவு எய்தியுள்ளனர்.
- O இந்தியப் படை வீரர்கள் — *1024* க்கு மேல் கொல்லப் பட்டுள்ளனர். அவர்களுள் *40* உயர் அதிகாரிகளும் அடங்குவர்.
- O காயமடைந்த இந்தியப் படையினர் *2000* க்கு மேற்பட்டோர்.
- O இந்தியத்தரப்பில் சேதமடைந்த கவச வண்டிகளும், தகரி(டாங்கி)களும் —*14*.
- O சேதமாக்கப்பட்ட மலையுந்து (Jeep)களும், படைத்துறைச் சரக்குந்துகளும் — 30 க்கும் மேல்.

(தொடர்ச்சி 12ஆம் பக்கம்)

(முன் பத்தி தொடர்ச்சி)

பிடியை விட்டுக் கொடுக்காத, **ஒரே விடுதலை மறவரே!** தாங்கள் செயலில் இறங்குங்கள்! தமிழகத்தை மீட்டுத் தமிழ் நிலத்தை நிலை நாட்டி இனத்தை காக்க வழி காட்டுங்கள்.

இளைஞர் சூளுரைப்பர்!
தோள் கொடுப்பர்!
வாளெடுப்பர்!
தமிழகத்தை! மீட்டெடுப்பர்.
வெற்றியே நமக்கு!
தமிழ் நாடு தமிழருக்கே!
தமிழ் நாடு தமிழருக்கே!
வெல்க! மொழி, இனம் நாடு!

— இவண்.
நற்றிணை, சென்னை 4

காளிமுத்துவின் கண்டுபிடிப்பு!

முன்னாள் அமைச்சர் காளிமுத்து கல்லூரி மாணவராக இருந்த பொழுது **தென்மொழி** அன்பராக இருந்தார்; வளர்ந்தார். தூயதமிழ் வளர்ச்சியில் அவர் ஆர்வம் காட்டியதை நாம், அவர் மதுரை, தியாகராசர் கல்லூரியில் படித்துக் கொண்டிருந்த பொழுது, அறிந்து பாராட்டியிருக்கின்றோம்.

ஆனால், அவர் தமிழறிவு, அவர் அரசியலில் புகுந்தபின் திசைமாறி, வசைமாரி பொழியவே பயன் பட்டது என்பதைக் கண்டு மிகவும் வருந்தியிருக்கின்றோம்.

இன்றோ, அவர் நிலை இன்னும் கீழிறங்கி இரங்கத் தக்கதாகப் போய் விட்டதே! இவரின் இந்தக் கீழிறக்கத்திற்குத் தமிழன்னையே வெட்கப் படுவாள். ஆனால் இவர் அன்றாடம் சாடிக்கொண்டிருக்கும் **செயலலிதா** வெட்கப் பட மாட்டார். ஏனென்றால், அவர் வெட்கப் படக் கூடாத நிலையில் வளர்ந்தவர்; வாழ்ந்தவர்.

பின், ஏன், இவர், இவருக்குள்ள தமிழறிவைக், கற்பனையாற்றலைச் **செயலலிதாவிற்குப்** புதுப் புதுப் பட்டங்களைக் கொடுப்பதில் செலவழித்துக் கொண்டிருக்கிறாரோ, தெரியவில்லை. அரசியல் சாய்க் கடையில் ஒருவன் கால் வைத்தால், அங்கேயே படுத்துப் புரண்டு கொண்டிருக்கத்தான் தெரியுமா? மேலேறி வரத் தெரியாதா?

அவர் கடந்த ஓரிரு மாதங்களில் முன்னாள் திரைப்பட நடிகை **செயலலிதா**விற்குக் கொடுத்த சில பட்டங்களை எடுத்துக் காட்டிற்காக — முன்னாள் தென்மொழியன்பர் காளிமுத்துவுக்கு மீண்டும் படையல் செய்கிறோம்.

> தலையின் இழிந்த மயிரனையர் மாந்தர்
> நிலையின் இழிந்த கடை.

(பெயர்கள் பல வடசொற்களாக இருப்பினும் அவர் அறிவால் கண்டு பிடித்தவற்றை மாற்றக் கூடாது என்பதால் அப்படியே தரப்பெறுகின்றன.)

சிருங்காரி.	அடிமை மங்கை
சண்டாளி.	'செல்வி'
சூர்ப்பனகை.	பதுமை
மூளி அலங்காரி.	பித்தலாட்டப் பிசாசு
மேல் மாடப் புறா.	கரன்சி நாயகி
பகட்டுக் காட்டும் —	மாயப் பிசாசு
— பஞ்சை வர்ணக்கிளி.	பார்வைப் பதுமை
தங்கமுலாம் பூசிய —	'லட்சிய தேவதை'
—அலுமினிய அணங்கு	ஹெலன் கீலர்
காலாவதியான —	கிளியோ பாத்ரா
— கவர்ச்சிப் பாவை.	ரோமாபுரி ராணி
போயசு கார்டன்	கொட்ட மடிக்கும் —
— மாடப் புறா.	— வஞ்சி
ஒய்யாரி	நெஞ்சை நஞ்சாக்கிக் —
சேல்விழிச் செல்வி	கொண்ட பஞ்சமா —
	— பாதகி,
பால்கனிப் பாவை	உல்லாசி.
மேனா மினுக்கி	தொல்லிப்பாவை
செம்புரவி.	சூழ்ச்சிக்காரி.
கள்ளத் தீர்க்கதரிசி	அடிபட்ட புலி.

(2-ஆம் பக்கத் தொடர்ச்சி)

வழக்கறிஞருமாகிய திரு. பா. சண்முகம் கீழ் வருமாறு மதிப்பிட்டுள்ளார்.

"தமிழ் நாட்டில் கடந்த 10 ஆண்டுகளாக ஏன் என்று கேட்க எவருமில்லாக் கொள்ளை ஆட்சி நடந்து வந்தது. ஊழலை ஒழிக்க வந்ததாகச் சொன்னவர்கள் ஆட்சியில் என்ன நடந்தது? கொள்ளை என்றால் கொள்ளை; கணக்கு வழக்கில்லாத கொள்ளை! துட்டு கொடுக்க வில்லை யென்றால் எங்கேயும் செயல் நடக்காது. ஏவலரிலிருந்து அமைச்சர் வரைக்கும் வரைமுறையில்லாமல் கையூட்டு ஊழல் வளர்ந்திருக்கிறது. தி. மு. க. காலத்தில் இலக்கக் கணக்கில் கையூட்டு வாங்கினார்கள். இவர்கள் காலத்தில் கோடிக் கணக்கில் சுருட்டினார்கள்! நல்ல வளர்ச்சி! (விலையேற்றத்திற்கு ஏற்ப இதுவும் ஏறியதில் வியப்பென்ன உள்ளது.)

நான் உறுதியாகச் சொல்கிறேன். நடுவண் புலனாய்வுத் துறை தமிழ் நாட்டின் முன்னாள் அமைச்சர்களிடம் ஆய்வு செய்தால், இன்னும் தமிழ் நாட்டில் பதினைந்து ஆண்டுகளுக்குப் பொது மக்களிடம் வரி தண்டுதற்குத் தேவையில்லாத அளவுக்குக் கறுப்புப் பணம் கிடைக்கும். தமிழ்நாட்டின் எழுபத்தைந்து விழுக்காட்டு வருமானம் அமைச்சர்களிடந்தான் போய்ச் சேர்ந்திருக்கிறது.

சரி, இவர்கள் தாம் இப்படியென்றால், பேராயக் கட்சி மட்டும் நாணயமானதா? பல ஆண்டுகளாக எப்பொழுது எப்பொழுதென்று பேராயக்கட்சிக் காரன் காத்துக் கொண்டு ஒருவன் கையிலே வாங்கினான்; இன்னொருவன் பெட்டியிலே வாங்கினான். இவன் (பேராயக் கட்சிக் காரன்) கோணிப்பையைத் தூக்கிக்கொண்டு, நேராக அரசுக் கருவூலத்திற்கே வந்து வாரிச் சுருட்டிக் கொண்டு கிளம்பி விடுவான்"

— **வேற்கையன்.**

அன்பர்கள் கவனிக்க!

பொறுப்பாசிரியர் அவர்களைவந்து காணவும், கண்டு பேசவும் விரும்பும் அன்பர்கள் கட்டாயம் காரி, ஞாயிறு ஆகிய நாள்களில் மாலை 5 மணிக்கு மேல், எழுதி இசைவு பெற்றுக் கேட்டுக்கொண்டு வருமாறு வேண்டிக்கேட்டுக் கொள்கிறோம்.

-அமைச்சர்.

Scanned with CamScanner

தமிழா!

பாவலர். தமிழ்க்குமரன்.

தமிழா! நீ உண்ணு கின்றாய்;
தமிழா! நீ உடுத்து கின்றாய்;
தமிழா! நீ உலவு கின்றாய்;
தமிழ்நலம் மறந்தோ னுக!
தமிழா! நீ சைப்ப டங்கள்
தமைப் பார்த்து மகிழு கின்றாய்!
தமிழா! நீ நெகிழாய் ஈழத்
தமிழரின் நிலைக்கே உள்ளம்!

தனக் கொன்று நேர்ந்தா லன்றித்
தமிழனுக்(கு) உறைக்கா தாமோ?
எனக் கென்ன என்றி ருத்தல்
இன நல மாகு மாசொல்?
மனத் தெழப் புயல்இ னத்தை
மதித் தெழ வேண்டா மாநீ?
கனத்துளம் தமிழ்ப்ப கையைக்
கருவறுத் துரிமை நாட்டு!

அவர்க்கின்று துன்ப மென்றால்
அத்துன்பம் தன்னை நாளை
இவர் நமக்(கு) அளிக்க நேரும்
என்பதை மறவா தேநீ!
எவர் என்ன சொன்ன போதும்
ஈழமே விடிவாம் என்று
தவறுதுன் பங்கை யாற்றித்
தமிழீழம் தன்னை மீட்பாய்!

அகத்தினில் இனவு ணர்வும்
அடுகளத் தாண்மை வீறும்
மிகப் பொங்க உரிமைப் போரில்
வெற்றி நீ நாட்டு வாயே!
உகிரொடு சதையாய் நீயும்
உறவுக ளோடி ணைந்து
தகவுடை உரிமை மீட்டுத்
தமிழீழம் தோற்று விப்பாய்!

(10-ஆம் பக்கத் தொடர்ச்சி) :

- சேதமாக்கப்பட்ட திருகிறக்கையூர்திகள் (Helicoptor) — 6
- புலிகளிடம் அரணடைந்த இந்தியப் படைவீரர்கள் 20 பேர். இவர்கள் அனைவரையும் புலிகள் விடுவித்து விட்டனர்.

— மற்றபடி போராளிகளையும் போராளிகளின் படகுகளையும் கடலில் தாக்கி அழிப்பதாக இந்திய அரசு கூறுவதெல்லாம் அப்பட்டமான பொய்யாகும். ஒன்றுமறியா மீனவத் தமிழர்களையும் அவர்களின் படகுகளையும் அழித்து விட்டே இந்திய அரசு புலிகளை அழித்ததாக இவ்வாறு புளுகுகிறது.

'வீரவேங்கை': 4-5.

உ.த.மு.க. வின் உயர்ந்த கொள்கைகள்!

1) தூய்மையான தமிழ்மொழி முன்னேற்றம்!
2) சாதியற்ற, மத வேறுபாடற்ற சமநிலைக் குமுகாயம்!
3) இழிவுகளும், பூசல்களும், ஏமாற்றும் இல்லாத அரசியல்!
4) தமிழ்த் தேசிய இனத்திற்குப் பொருந்திய பொதுவுடைமைப் பொருளியல்!
5) மனம், அறிவு, வாழ்க்கை இவற்றை வளப்படுத்தவும், நலப்படுத்தவுமான அருவருப்பற்ற கலை வளர்ச்சி!
6) பழந்தமிழ் மரபுக்கும், மாந்தவியல் சிறப்புக்கும் ஒத்த பண்பாட்டுப் பரிமாற்றம்!
7) எல்லாவற்றிலும் காலத்திற்கேற்ற அறிவியல் அணுகுமுறை!

சிந்தனைக்கு - 19

தொடக்கத்தில் அரசியலுக்குப் பணம் தேவைப் பட்டது. இப்பொழுது பணத்துக்கு அரசியல் தேவைப் படுகிறது.

(மாதம் இருமுறை வெளிவரும்) இதழ் எண்- 101;

அனுப்புதல்:
தமிழ்நிலம்
5. அருணாசலத் தெரு
திருவல்லிக்கேணி, சென்னை-5
தொலைபேசி எண்: 847829;

உறுப்பினர் :
ஆண்டுக் கட்டணம் உரு. 44-00
அரையாண்டுக் கட்டணம் உரு. 22-00

பெறுநர்: நூல் அஞ்சல்
திரு. / திருவாட்டி

ஆசிரியரும், வெளியிடுபவரும்: பாவலரேறு பெருஞ்சித்திரனார்.
அச்சிடுவோர்: தென்மொழி அச்சகம், 5, அருணாசலத் தெரு, சென்னை-5;
TN/MS (C) 657